# "திருகோணமலைப் பிரதேசத்தில் வெளியாகின்ற 'நீங்களும் எழுதலாம்' சஞ்சிகை ஓர் விமர்சன நோக்கு"


**Supervisor**
*Dr. AFM. Ashraff,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. SMB. Noorul Hasna,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*



## ஆய்வுச் சுருக்கம்

அச்சு இயந்திர வருகையின் பின்னர், ஈழத்தின் பல பாகங்களிலும் சஞ்சிகைகள் வெளியாவதைப் போன்று திகோணமலையிலும் பல சங்சிகைகள் தோற்றம் பெற்றன, தோற்றம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. எனினும் கவிதைக்கென்று தனியானதொரு சஞ்சிகை தோற்றம் பெறுவது குறைவாகவே உள்ளது. எனவே திருகோணமலைப் பிரதேசத்தில் வெளியான சஞ்சிகை முயற்ச்சிகளை இனங்கண்டு, அச்சஞ்சிகைகளுள் 'நீங்களும் எழுதலாம்' எனும் கவிதைச் சஞ்சிகையினை (உள்ளடக்கம், கவிதைகளின் புனைதிறன் உத்திகள், சஞ்சிகைக்கு கவிவளம் சேர்த்தோர் போன்றவற்றை) ஆராய்வதன் மூலம் எதிர் காலத்தில் திருகோணமலையில் கவிதைச் சஞ்சிகை வெளிவருவதற்கான சாத்தியமான நிலைமை எந்தளவு காணப்படுகிறது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

இது பண்புசார் (Quantitative) ஆய்வு என்பதனால் இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம்நிலை, இரண்டாம்நிலை மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம்நிலை தரவுக்காக நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionnaire), போன்றவை மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம்நிலை தரவுக்காக புத்தகங்கள், இணையம், தேசிய தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர், போன்றவை மூலமும் தரவுகள் சேரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வானது திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள இலக்கியவாதிகளுக்கும் கவிஞர்களுக்கும் சஞ்சிகை பற்றிய அறிவினை வழங்குவதன் மூலம் 'நீங்களும் எழுதலாம்' போன்ற கவிதைச் சஞ்சிகையினை உருவாக்கலாம் என்பது முடிவாகக் காணப்படுகின்றது.



**பிரதான சொற்கள்(Key Words) :** சஞ்சிகை, கவிதை